# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.53/2024** **நாள்** : 30.07.2024

**கோயம்பேடு மேம்பாலத்திற்கு அருகில் உள்ள குடிநீர் பிரதான குழாயுடன் செம்பரம்பாக்கம் 530 எம்.எல்.டி குடிநீர் பிரதான குழாயினை இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 31.07.2024 அன்று காலை 09.00 மணி முதல் 01.08.2024 காலை 09.00 மணி வரை (24 மணி நேரம்) மண்டலம் – 7 - க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

கோயம்பேடு மேம்பாலத்திற்கு அருகில் உள்ள குடிநீர் பிரதான குழாயுடன் செம்பரம்பாக்கம் 530 எம்.எல்.டி குடிநீர் பிரதான குழாயினை இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 31.07.2024 **அன்று காலை** 09.00 **மணி முதல்** 01.08.2024 **காலை** 09.00 **மணி வரை** (24 **மணி நேரம்**) மண்டலம்–7 (அம்பத்தூர்) -க்குட்பட்ட முகப்பேர் கிழக்கு, முகப்பேர் மேற்கு, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், பாடி மற்றும் திருமங்கலம் ஆகிய பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044-4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்.

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in